DEPOSITION OF WITNESS
IN THE SPECIAL COURT FOR TRIAL OF CASES
UNDER SC & ST(PoA) ACT, THOOTHUKUDI
Case No : **S.C. No.25/2023**
Prosecution Witness No.49

| | | |
|---|---|---|
| Name | : | **டாக்டர்.திரு.அலன் பென்னி** |
| Father's Name | : | **லாரன்ஸ் வெஸ்லி** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873 on the 13th day of August 2026.

**1 முதல் 15 வரையான எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர்படுத்தப்பட்டனர்.**

(மேன்மைமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை Crl.A(MD) No.494/2023 ல் 11.10.2023 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு படி எதிரிகள் அனைவரும் Observa Glass partition உள்ள தனி அறையில் இருக்க செய்யப்பட்டனர்–பதிவு செய்யப்படும் சாட்சியின் சாட்சியம் அவர்களுக்கு கேட்பதற்காக உரிய speaker facility மேற்படி அறையில் இருப்பது உறுதி செய்யப்பட்டது. நீதிமன்ற ஊழியர் திரு.தர்மேந்திரன் என்பவரும் மேற்படி அறையில் எதிரிகளுடன் technical தேவைக்காக அமர வைக்கப்பட்டார். மேற்படி மேன்மைமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளை உத்தரவில் குறிப்பிட்டுள்ள படி சாட்சியால் எதிரிகளை பார்வையிட இயலாது என்பதும், அதே போல் ஆஜர்படுத்தப்பட்டுள்ள எதிரிகளாலும் சாட்சியை எப்பொழுதும் பார்வையிட இயலாத வகையில் இந்நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்பதும், இந்நீதிமன்ற அனுமதியுடன் எதிரிகள் அமர வைக்கப்பட்டுள்ள அறையினுள் பிரத்யேகமாக அமைக்கப்பட்டுள்ள light arrangements ON செய்யப்பட்டால் மட்டுமே சாட்சியால் அருகில் சென்று எதிரிகளை பார்வையிட இயலும் என்பதும் அப்போதும் எதிரிகளால்

அறையினுள் இருந்து சாட்சியை பார்க்க இயலாது என்பதும் சாட்சிக்கு இந்நீதிமன்றத்தால் தெரிவிக்கப்பட்டது என்பது தெளிவுபடுத்தப்படுகிறது.)

<u>சாட்சியம் பதிவு செய்ய ஆரம்பிக்கப்பட்ட நேரம் 12.34.</u>

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்பொழுது தூத்துக்குடியில் தனியாக மருத்துவமனை வைத்து மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். முன்னதாக கடந்த ஆண்டு 2025 அக்டோபர் மாதம் வரை தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் இருதயவியல் பிரிவில் துணை மருத்துவ பேராசிரியராக பணிபுரிந்து வந்தேன். அவ்வாறு நான் பணிபுரிந்த காலத்தில் 22.02.2023 ம் தேதி மதியம் 03.05 மணிக்கு நான் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்த போது காவலர் மோகன்ராஜ் என்பவர் தூத்துக்குடி சோரீஸ்புரம், மாதவன் நகர் கிழக்கு பகுதியை சேர்ந்த பிச்சைகண்ணன் மகன் முத்துகுமார் என்ற 47 வயதான நபரை 108 ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு வந்த போது நான் பார்வையிட்டு அவர் இறந்துவிட்டார் என்பதால் brought dead என அறிவித்தேன். அவரது உடலில் இருந்த அடையாளங்களை குறித்துவிட்டு இறந்த நபரின் பிரேதத்தை பிண வைப்பறையில் வைப்பதற்காக அனுப்பி வைத்தேன். மேற்படி விவரங்களை நான் குறிப்பிட்டு கையெழுத்திட்டு வழங்கிய விபத்து பதிவேடு அத்துடன் இணைக்கப்பட்ட காவல்துறையினருக்கு வழங்கப்பட்ட intimation ஆகியவை என்னால் வழங்கப்பட்டவை தான். அவற்றிலுள்ள கையெழுத்துக்கள் என்னுடையவை தான். அவை முறையே **அ.சா.ஆ.52,53**. இது சம்பந்தமாக காவல் துணை கண்காணிப்பாளர் பின்னர் என்னை விசாரித்தார்.

<u>1 முதல் 13 வரையான எதிரிகள் தரப்பு பொதுவான குறுக்கு விசாரணை</u>

1. என்னிடம் இறந்த நபரின் உடலை கொண்டு வந்த காவலர் இறந்த நபரின் பெயர், முகவரி உள்ளிட்ட விவரங்களை தான் அறிந்து வைத்து தான் என்னிடம் கூறினார் என்றால் சரிதான். நான் வழங்கியுள்ள ஆவணங்களில் பச்சைகண்ணன் மகன் முத்துகுமார் என்பவர்

இறந்துவிட்டதாக எதுவும் குறிப்பிட்டு வழங்கவில்லை என்றால் சரிதான், பிச்சைகண்ணன் மகன் முத்துகுமார் என்று குறிப்பிட்டு வழங்கியுள்ளேன்.

2. 108 ஆம்புலன்ஸ் மூலம் ஒரு நபர் அவசர சிகிச்சை பிரிவுக்கு அழைத்து வரப்பட்டால் அந்த ஆம்புலன்சில் பராமரிக்கப்படும் ஏதேனும் பதிவேடு அல்லது ஆவணத்தில் அவசர சிகிச்சை பிரிவு சார்பாக ஏதேனும் குறிப்பு செய்ய வேண்டுமா என்றால் ஆம்புலன்சில் பராமரிக்கப்படும் ஒரு பதிவேட்டில், அப்போது அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்த யாரேனும் ஒரு மருத்துவர் கையெழுத்திட வேண்டும். என்ன காரணத்திற்காக நான் வழங்கிய விபத்து பதிவேட்டில் காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டதா என்பதில் yes என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை வளாகத்திலுள்ள புற காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது அதை தான் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன்.

3. மேற்படி என்னிடம் கொண்டு வரப்பட்ட அந்த நபரின் தொழில் என்ன என்று அவரை கொண்டு வந்த காவலர் என்னிடம் கூறாத காரணத்தினால் அது பற்றிய விவரம் எதுவும் நான் எழுதவில்லை என்றால் சரிதான். என்னிடம் அப்பொழுது அந்த நபர் வழக்கறிஞர் என தெரிவித்திருந்தால் நான் அதை விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டு இருப்பேன் என்றால் சரிதான். நான் வழங்கிய விபத்து பதிவேட்டில் தவறான விவரங்கள் குறிப்பிடப்பட்டுவிட்டதாகவோ, காவலர் மோகன்ராஜ் என்னிடம் தவறான தகவல் வழங்கிவிட்டதாகவோ எந்த விளக்கமும் என்னிடம் காவல் துணை கண்காணிப்பாளர் கேட்கவில்லை என்றால் சரிதான்.

4. சட்டம் சார்ந்த மருத்துவ வழக்கில் ஒரு நபர் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டால் நான் வழங்கியுள்ளது போன்று முதலில் விபத்து பதிவேடு தயார் செய்து, intimation தகவலை தயார் செய்து புற காவல் நிலையத்திற்கு அனுப்ப வேண்டும் என்றால் சரிதான். மேற்படி நான் வழங்கியுள்ள intimation அ.சா.ஆ.53 அரசு மருத்துவமனையில் பராமரிக்கப்படும் ஒரு பதிவேட்டில் வரிசையாக குறிப்பிட்டு பதிவு செய்யப்பட்டிருக்கும் என்றால் சரிதான். இவ்வழக்கில் காவல்துறையை சேர்ந்தவர் இறந்த நபரின் உடலை கொண்டு வந்ததால் மேற்படி intimation ஐ நேரடியாக அவரிடம் கொடுக்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான். அ.சா.ஆ.53 நான் பார்வையிடுவதில் அந்த intimation ஐ காவலர் மோகன்ராஜ் எத்தனை மணிக்கு பெற்று கொண்டார் என்பதற்கான குறிப்பு அதில் இல்லை என்றால் சரிதான். சட்டம் சார்ந்த மருத்துவ வழக்குகளில் நான் தயார் செய்துள்ளது போன்று அ.சா.ஆ.52 விபத்து பதிவேடு பதிவு செய்யாமல் நேரடியாக அ.சா.ஆ.53 intimation வழங்க இயலாது என்றால் சரிதான். இவ்வழக்கில் கொண்டு வரப்பட்ட நபர் இறந்துவிட்டார் என்ற நிலையில் மேற்படி அ.சா.ஆ.53 intimation ஐ தவிர தனியாக death memo வழங்கப்படும் நடைமுறை இல்லை என்றால் சரிதான். எங்கள் அரசு மருத்துவமனையில் அவ்வாறு death memo வழங்குவதற்கான ஆவணங்கள் எதுவும் பராமரிக்கப்படுவதில்லை என்றால் சரிதான். நடைமுறைகளில் உள்ள விதியின் படி death memo என்ற ஆவணமே கிடையாது என்றால் சரிதான்.

5. நான் பார்வையிடும் அ.சா.ஆ.52 மூன்று படிவங்களில் அதாவது triplicate ல் தயார் செய்யப்பட்டதன் அசல் என்றால் சரிதான். அ.சா.ஆ.52 ன் அசலை யார், எத்தனை மணிக்கு, எந்த தேதியில் பெற்று கொண்டார்கள்

என்ற விவரம் அதில் இல்லை என்றால் சரிதான். இறந்த நபரின் உடல் பிண வைப்பறையின் உள் வைக்கப்படும் பொழுது வழக்கமான நடைமுறைகளின் படி அங்கு பராமரிக்கப்படும் பதிவேட்டில் குறிப்புகள் செய்யப்பட்டு அந்த பிரேதத்திற்கான ஒரு எண் வழங்கப்பட்டு தான் வைக்கப்படும் என்றால் சரிதான்.

**14 வது எதிரி தரப்பில் எதிரியே நேரடியாக மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்று கொள்வதாக தெரிவித்தார்.**

**15 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என எதிரியே நேரடியாக தெரிவித்தார்.**

**மறுவிசாரணை** இல்லை.

**சாட்சியம் முடிக்கப்பட்ட நேரம் 13.05.**

Sd/–அலன் பென்னி

என்னால் பாளையங்கோட்டை மத்திய சிறைச்சாலையில் அமைந்துள்ள சிறப்பு நீதிமன்ற திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையெழுத்திட்டார்.

Sd/-P.V.Vasheethkumar
அமர்வு நீதிபதி,
பட்டியலில் கண்ட சாதியினர்
மற்றும் பட்டியலில் கண்ட
பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்புச்)
சட்டத்தின் கீழான வழக்குகளை
விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம்,
தூத்துக்குடி.